உ
சிவமயம்

Registered as a N
paper Ceylon
P. M. G. NO. H. A.
59/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணிமாதம்
28-ம் திகதி ஆரம்பமான

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும் மூசு வண்டறை பொய்கையும் போன்றதே ஈசனெந்தை யிணையடி நீழலே

புத. ருரு | யாழ்ப்பாணம்:—சுபானு வரு ஆடிமீ கக உ (1943 ஜூலைமீ 29 வியாழக்கிழமை) [இல. ருஉ

## இத்தாலிக்கும் நேச தேசங்கட்குமிடையில் சமாதானமா?

ஸ்டாக்ஹோம் யூலை 27

ராய்ட்டரின் விசேஷநிருபர் அறிவிப்பதாவது:- நேசக்கட்சிக்கும் இத்தாலிக்குமிடையே யுத்த நிறுத்தம் செய்வதற்கான பூர்வாங்கப் பேச்சு வார்த்தைகள் திங்கட்கிழமை இரவு வத்திக்கானில் ஆரம்பமாயிற்றென்று ஸ்வென்ஸ்கா டாக்பிளாடெட் பத்திரிகையின் பேர்னேநிருபர் அறிவிக்கிறார்.

## யாழ்ப்பாணப் பட்டின வரியிறுப்போர் சங்கம்

1943-ம் ஆண்டு ஆவணி மாதம் 1-ந் தேதி மேற்படி சங்கத்தின் நிருவாகசபைக் கூட்டம் ஸ்ரான்லி ரோட்டிலுள்ள 73-ம் இலக்க வீடாகிய சங்கக் காரியாலயத்தில் நடைபெறுமென்றும் அத்தருணம் வருகிற பட்டின சங்கத் தெரிவு, விபசாரவிடுதி, புகைரதப் போக்குவரத்து வசதியீன விஷயமாயும் தீர்மானங்கள் நிறைவேற்றப்படுமென ஷை சங்கக் காரியதரிசி தெரிவிக்கின்றார்.

## ஜனாப்ஜின்னா உயிர் தப்பினார்

### கத்தியால் தாக்கியவர் கைதுசெய்யப்பட்டார்

அகில இந்திய முஸ்லிம்லீக் தலைவரான ஜனாப் ஜின்னா இன்று பிற்பகல அவரைப் பேட்டிகாண வந்த ஒருவரால் தாக்கப்பட்டார். இவர் ஒரு முஸ்லிம அவர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டார். ஜனாப். ஜின்னாவுககுக் கனனத்திலும் கையிலுமு அற்ப காயங்களை ஏறபட்டன.

இந்த முஸ்லிம்மனிதனின் பெயர் முஹமமது ரசிக் எனறும் அவர் காக்ஸார் ஸ்தாபனததிலும் முஸ்லிம தொண்டர் படையிலும் ஒரு அங்கததவரெனறும் சொலலபபடுகிறது.

முன்னறிக்கை இல்லாமல் இவர் இனறு பிறபகல் ஜனாப ஜினனாவின் வாசஸ்தலத்திற்கு வந்து அவரைப் பேட்டிகாண விரும்பினார். முன்னறிக்கை இல்லாதபடியால் பேட்டிக்குக் காலம் குறிப்பிடப்படவில்லை. என்று ஜனாபஜின்னாவின் காரியதரிசி சுட்டிக் காட்டியபொழுது இவர் குழப்பஞ்செய்ததாகச் சொலலப்படுகிறது. அது சமயம் அடுத்த அறையிலிருந்த ஜனாப்ஜின்னா வந்து குறுக்கிட்டார். அப்பொழுது இவர் ஜனாப் ஜின்னாவைக் கழுத்திற் கத்தியால் குத்த ஜின்னா அவருடைய கையை எட்டிப் பிடித்துக்கொண்டதால் கத்திக்குத்து தமது கழுத்தில் விழாமல் தடுத்துவிட்டார். ஆனால், ஜனாப் ஜின்னாவுக்குக் கன்னத்திலும் கையிலும் அற்ப காயங்கள் உண்டாக்கப்பட்டன. பொலிசார் உடனே அழைக்கப்பட்டனர். கத்தியால் தாக்கியவர் கைதுசெய்யப்பட்டார்.

## "இத்தாலியில் பெரும் மாறுதல்கள் ஏற்படலாம்"

### முஸோலினியின் வீழ்ச்சியால் ஏற்பட்டுள்ள புதியநிலைமைபற்றி மிஸ்றர். சர்ச்சில்

லண்டன் யூலை 27

இன்று காலையில் கொம்மன்ஸ் சபையில் கேள்வி நேரத்திற்குப் பிருத்தானிய பிரதமமந்திரி மிஸ்றர். சர்ச்சில் பிரவேசித்தார். அப்பொழுது அவர் பலத்த கரகோஷத்துடன் வரவேற்கப்பட்டார். சமீபத்தில் இத்தாலியில் நடைபெற்ற சம்பவங்கள் பற்றிப் பிரதம மந்திரி அறிக்கை வெளியிடுவதற்கு வசதியளிக்கும் பொருட்டுக் கேள்விகளுக்கு வெகு துரிதமாகப் பதிலளிக்கப்பட்டது.

மிஸ்றர். சர்ச்சில் தனது அறிக்கையிற் கூறியதாவது:—

இம்மாகா யுத்தத்தில் பிரதான குற்றவாளிகளில் ஒருவரின் வீழ்ச்சிச் செய்தியைச் சபையின் அங்கத்தினர்கள் சந்தோஷத்துடன் அறிந்திருப்பர், இத்தாலியில் இதுவரை நெடுங்காலமாக இருந்து வந்த முஸோலினியின் ஆட்சி முடிந்தது. இத்தாலிய சரித்திரத்தில் ஒரு படலம் முடிந்துவிட்டதற்கு அறிகுறியாகும். பாஸிஸ்ட் கட்சியின் அடிப்பாகம் ஆட்டம் கொடுத்துவிட்டது. பாஸிஸ்ட் கட்சியே அடியோடு நாசமாகிவிடுமென்று கூறுவதற்கு ஜோஸ்யம் வேண்டியதில்லை.

இத்தாலியில் பெரும் மாறுதல்கள் ஏற்படலாமென்று நாம் எதிர்பார்க்கலாம். ஆனால், அம்மாறுதல்கள் இத்தாலியிலுள்ள ஜெர்மன் படைகளை எவ்வளவு தூரம் பாதிக்குமென்று தற்சமயம் கூறுவதற்கில்லை. முஸோலினியின் அதிக்கிரம செயலகள் இத்தாலிய மக்களுக்கு பெரும் நஷ்டத்தை உண்டுபண்ணிவிட்டது.

1940ம் வருடம் மே மாதத்தில் யுத்தத்தில் தோற்றுக்கொண்டிருக்கும் பிரான்ஸைப் பின்பக்கமாகத் தாக்கி மத்தியதரைக் கடல் பிரதேச நாடுகளில் முன்னேறுவது இத்தாலிக்கு மிகவும் சுலபமாகத் தோன்றியது; ஆனால், இன்று நிலைமை அடியோடு மாறிவிட்டது. காலசக்கரத்தின் போக்கினால் பிரிட்டிஷ் படைகளும் அமெரிக்க படைகளும் இத்தாலியரின் ஆபிரிக்க சாமராஜயத்தையும் வட ஆபிரிக்காவையும் சிஸிலியின் பெரும் பகுதியையும் கைப்பற்றி விட்டன.

## வாளால் தலையில் வெட்டினான்

### படுகாயமடைந்தவரின்வாக்குமூலம்

யாழ்ப்பாணம் யூலை

மல்லாகம் பொலீஸ் கோட்டில் நீதிபதி திரு. குணம். ஸ்பென்சர் முன்பாகத் தாவடிவாசிகளாகிய வி குமாரசாமி கே சிவஞானம் எஸ் வைத்திலிங்கம் முதலியவர்கள்மீது அவ்வூர் வாசியாகிய வி தம்பையா என்பவரைக் கூரிய ஆயுதத்தினால் தாக்கி மரணத்தை உண்டாக்கத் தக்க காயம் வருவித்ததாகவும் அதே நேரத்தில் பரமேஸ்வரி என்னும் குமர்ப்பெண்ணுக்கும் காயம் வருவித்ததாகவும் குற்றச் சாட்டுகள் சாட்டப்பட்டன.

அப்போது காயமடைந்த வேலுப்பிள்ளை தம்பையா கூறிய வாக்குமூலத்தின் சாராம்சம் வருமாறு:—

சென்ற ஆனிமாதம் 1ந் திகதியன்று இரவு 9 அல்லது 9-30 மணியளவில் நானும் எனது பெருமகன் நாகலிங்கமுமாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்தோம். அப்போது 1ம் எதிரி எனது படலையில் நின்று தம்பையா அண்ணே எனக் கூப்பிட்டான் நான் கையலம்பிவிட்டுப் படலைக்குப் போனபோது 1ம எதிரி வாளுடன் 2ம் எதிரி பொல்லும் வில்லுக்கத்தியும் 3ம எதிரி சததகமும பொலலும வைததுக்கொண்டு நின்றார்கள். என்னைக் கண்டதும் 1ம் எதிரி நீயும் உனது தம்பியுமாக வழக்குவைத்து நடத்தப்போறீர்களா? எனக் கேட்டு வாளால் தலையில் வெட்டினான். உடனே நான் ஐயோ வெட்டுறாங்கள் எனக்குளறினேன். பின்னர் 3ம் எதிரி இரண்டு தரம பொல்லால அடிததான். நான் அவனது கையிலிருந்த பொல்லைப் பறித்து 3ம எதிரிக்கு இரண்டுதரம் பொலலால அடித்தேன். அப்போது 2ம் எதிரி எனக்குப் பிற்பக்கமாக வந்து எனது முதுகில் 2 தரம் குத்தினான். அந்த நேரத்தில்நான் மயக்கமடைந்து கீழே வீழ்ந்துவிட்டேன. சிறிது நேரத்தால் மயக்கம் தெளிந்தபோது எனது பெருமகள் பரமேஸ்வரி குமாரசாமி வெட்டிப் போட்டு ஓடுகிறான் எனக் குழறிய சததங்கேட்டது. நான் தெண்டித்து எழும்பிப்போக மீண்டும் விழுந்துவிட்டேன், நான் ஆஸ்பததிரியிலிருககும்போத்த எனது வீட்டிலுள்ள ஆட்களுக்கும் காயஙகள எனக் கேளவிப்பட்டேன். அன்றைய காலையில் 1ம் 3ம் எதிரிகள் மீதும் வேறொருவர்மீதும் யாழ்ப்பாணம் கோட்டில் எனது தமபி சுப்பையாவால ஓர் வழக்குத் தாக்கல் செயயப்பட்டது.

இததுடன் நீதிபதி வழக்கைத் தவணையிட்டு எதிரிகளைப் பிணையில் விட்டார்.

## அரசாங்கப் புராதன சாஸனங்கள்

அரசாங்கப் புராதன சாஸன சாலையைச் சேர்ந்த எஞ்சிய புராதனப் புத்தகங்கள் இம்மாதக் கடைசியில் கொழும்பிலிருந்து நுவரெலியாவுக்கு அப்புறப்படுததப்படும். இப் பிரிவிலுள்ள புத்தகங்களில் ஆராய்ச்சிககுரிய விஷயங்கள அடங்கியிருக்கின்றன.

## பட்டினசபைத் தலைவரின் கடிதம்

### கண்டனப் பிரேரணையின் முடிவு

யாழ்ப்பாணம் யூலை 25—

யாழ்ப்பாணப் பட்டின சங்கத் தலைவர் திரு. கே. அய்யாத்துரைமீது "புனருத்தாரணக் கொம்மிற்றியாரது திட்டத்தை அவர்களறியாது மாற்றியமைத்தமை தலைவர் செய்த செயலின் காரணமாக விருப்பதால் இச்சபை அவரைக் கண்டிக்கிறது. என்ற பொருள்பட ஒரு பிரேரணையைத் திரு. ப சுப்பையா சங்கத்திற்கு அனுப்பியிருந்தார். அப்பிரேரணை பிரேரிக்கப்பட்டால் எவ்விதம் முடிவெய்து மென்பதைப்பற்றி அறியப் பொதுசனங்கள் ஆவலுற்றிருந்தனர். தலைவரவர்கள் திரு. சுப்பையாவுக்கு இதைப் பற்றி ஓர் நீண்ட கடிதம் எழுதியுள்ளார். அக்கடிதத்தின் சாராம்சம் வருமாறு:

### தலைவரின் கடிதம்

"ஒரு பிரேரணை கூட்ட வரலாற்றில் சேர்ப்பதற்காகச் சங்க அங்கத்தவர் ஒருவரால் அனுப்பப்படுவதானால் சங்கக் காரியதரிசிக்கு அனுப்பப்பட வேண்டுமென உபவிதிகள் கூறுகின்றன. அப்படியிருந்தும் நீங்கள் இக்கண்டனப் பிரேரணையை எனக்கு அனுப்பியிருந்திரேயொழியக் காரியதரிசிக்கு அனுப்பவில்லை. காரியதரிசிக்கு அனுப்பிய பிரேரணையின் நகலை எனக்குக் கொடுத்ததாக எனக்குக் கொடுக்கப்பட்டபோது நான் தீர்மானித்தேன். ஆகையினால்தான் நான் கூட்ட வரலாற்றில் சேர்க்காது விட்டேன். சங்க நிர்வாக விஷயத்தில் தலைவர் தமது எண்ணப்படி நடக்கலாம், எனச் சட்டம் கூறுகின்றது. நிர்வாக சபை ஒன்று ஏற்பட்டிருந்தால் அந்நிர்வாகசபை தலைவருக்குப் புத்திமதி கூற முடியுமே யொழிய [illegible] படுத்த முடியாது. கட்டுப்படுத்த வேண்டின் பிரேரணைமூலம் சங்கக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருத்தல் வேண்டும். நான் சங்கத் தீர்மானங்கள் ஒன்றுக்காவது விரோதமாகவாவது அன்றேல் எனது மனச்சாட்சிக்கு விரோதமாகவாவது ஒரு காலமும் நடக்கவில்லை. ஆகையினால், சங்கக் கூட்ட வரலாற்றில் சேர்க்க இடங் கொடுக்கவில்லை.

இக்கடிதம் அனுப்பப்பட்டதும் அதன் மேல் கண்டனப் பிரேரணை முற்றுப் புள்ளியடைந்தது. ஆனால், சென்ற மார்கழி மாதம் 12 ந் திகதி நடைபெற்ற சங்கக் கூட்டத்தின் தலைவர், உபதலைவர் திரு. சுப்பையா பழைய தலைவர் திரு. பொன்னம்பலம் முதலிய மூவரையும் ஒரு நிர்வாக சபையாக நியமிக்க அவர்களிடம் புனருத்தாரண வேலையைச் செய்யும்படி முழுஅதிகாரத்துடன் ஒப்படைப்பதாகத் தீர்மானஞ் செய்யப்பட்டது என்பதாலேயே இக்கண்டனப் பிரேரணை உண்டாகிறது.

## குடியேற்றப்பகுதிக்கு மந்திரி விஜயம்

சென்றவாரக் கடைசியில் விவசாயமந்திரி வடமத்தியமாகாணத்திலுள்ள காஹகமைக் குடியேற்றப் பகுதிக்கு ஸ்தலஸ்தாபனக் கொம்ஷனர் விவசாய டைரெக்டர் சுகாதார உதவி டைரெக்டர் ஆகியோருடன் விஜயஞ் செய்தார். குறித்த கோஷ்டி புதிய நகருக்குரிய ஸ்தலங் [illegible]ட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் சுபானுஹு
ஆடிமீ கூஉ வியாழக்கிழமை

## இத்தலியின் நிலைமை

இத்தலி நாட்டின் பிரதம மந்திரியும் சர்வாதிகாரியுமாகவுள்ள முஸோலினி, எவரும் காத்திரா வண்ணம் சடுதியில் தமது பதவியிலிருந்து விலக வேண்டி நேர்ந்துவிட, இத்தலிய நாட்டு அரசராகிய விக்ரர் எமனுவல் மன்னர் சகல பொறுப்புக்களையும் தாமே வகித்துக்கொண்டு மார்ஷல் படக்கிளியோ என்பவரைப் பிரதம மந்திரியாகவும் பிரதம சேனைபதியாகவும் பிரசித்தப்படுத்தி நியமிக்கலாயினர்; படக்கிளியோவும் தமது கடமைகளை ஏற்றுக்கொண்டு முன்போல் யுத்தத்தை நடத்தி வருகின்றாராம். முஸோலினிதமது பதவியைவிட்டுநீங்கியமைக்குக் காரணம், இடையில் அவருக்கு நேர்ந்த சுகவீனமென்று சொல்லப்படுகிறது; சுகவீனமும் வேறொன்றுமல்லவாம், மாருட்டமாம். இந்த மாருட்டம் முஸோலினிக்கு நேர்ந்தமைக்குக் காரணமென்னவென்பது எவருக்கும் புலப்படவில்லையாம்; இற்றைக்கு ஒரு வாரத்திற்குமுன் ஹேர் ஹிட்லரும் முஸோலினியும பரஸ்பரம் நேரிற் சந்தித்து யுத்த விஷயமாகச் சிறிது நேரம் கலந்து பேசினார்களென்ற செய்தி அப்பொழுது வெளிவந்தது; ஆனால் அவ்விரு சர்வாதிகாரிகளும் அந்த நேரத்திலே என்னபேசினார்களென்பது அறியப்படவில்லை; ஹிட்லர் அந்தச் சமயத்திலே முஸோலினிக்குச் சொல்லிய சில மூற்று வார்த்தைகள் முஸோலினிக்குப் பிரதிகூலமாகவிருந்தமையினால், இவர் மனத்தளர்ச்சியுற்று அதிகஞ் சிந்தித்த காரணத்தினாலே மாருட்டம் நேர்ந்திருக்கக்கூடுமென்று சிலர் யூகிக்கிறார்கள்; மாருட்டத்துக்குக் காரணம் இன்னதென்பதைத் தெரியாவிட்டாலும் முஸோலினிக்கு மாருட்டம் ஏற்பட்டுவிட்டதென்பதை எவரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள. எவ்வாற்றுனும் முஸோலினியின் சர்வாதிகாரத்திற்கு ஒரு முடிவு வந்துவிட்டதென்பது தீர்க்கமானது.

முஸோலினியின் கருமம் இவ்வளவில் நிற்க, இத்தலியநாட்டு அரசராகிய விக்ரர் எமானுவல் சொல்வதை யோசிக்குமிடத்தில், இத்தலியர் இனனமும் யுத்தத்தைத் தொடர்ந்து நடத்த நோக்கங் கொண்டிருக்கிறார்களென்பது நன்கு புலப்படக் கிடக்கின்றது. 'இத்தலிய மக்களே, இன்று தொடக்கம் நானே இத்தலிய ராச்சியத்திற்குரிய சகல வகையான சைநியங்கட்கும் தலைமை வகிக்கலானேன். மார்ஷல்படக்கிளியோவையே யுத்த பரிபாலன அதிகாரியாக நியமித்துள்ளேன்; நீவிர் ஒவ்வொருவிரும் யுத்தத்தில் உங்களுக்குரிய ஸ்தானங்களை வகித்து உங்களுங்கள் கடமைகளைச் செய்தல் வேண்டும்; நீவிர் எவரேனும் உங்கள் கடமையில் திறம்பினால் நான் பொறுக்கமாட்டேன்; பகைவர்கள் புண்ணிய நாடாகிய எங்கள் நாட்டில் விளைத்த அநர்த்தங்களையெல்லாம் நீவிர் அறிவீர்கள்; எங்கள் நாட்டின் மகத்துவத்தைப் பாதுகாக்கும் விஷயத்தில் நான் உங்களுடன ஊக்கத்தோடும் அபிமானத்தோடும் ஒத்துழைப்பேன்" எனக் கூறியுள்ளாராம். இப்பொழுது மேலதிகாரம் வகித்துள்ள படோகிளியோவும் இத்தலிய மக்களை விளித்துக் கூறும்போது, யுததத்தை இறுதி வரையில் நடததியே தீரவேண்டுமென்னுங் கருத்துப்படக் கூறியுளளார். சிஸிலியில இப்பொழுதும் வடகிழக்குப் பகுதியிலே இரத்த வெள்ளமபெருகக் கோரமான யுததம் நடைபெறுகின்றதெனத் தந்திச் சமாசாரங்களால அறியக கிடக்கின்றது. முஸோலினி தம பதவியிலிருந்து நீங்கியதைப் பற்றியாக, இத்தலியிலுண்டான ஏனைய மாறுதல்களைப் பற்றியாக ஹிட்லர் இற்றை வரையில் ஏதும் வெளியிட்டதாகச் சமாசாரங் கிடைக்கவில்லை. இத்தலியர் ஜர்மனியரை விட்டுப் பிரிந்து பிரித்தானிய அமெரிக்கரோடு சமாதானஞ் செய்யக் கூடுமோ எனப் பலர் சிந்திக்கிறார்கள்; இன்னுஞ் சிலநாட் சென்ற பின இவைகளை உணரமுடியுமேயொழிய இப்பொழுது நாம் எதனையும அறிதல் முடியாதாம்.

---

## போக்குவரத்திலிருந்து நீக்கப்பட்ட 'கார்கள்'

போக்குவரத்திலிருந்து நீக்கப்பட்ட மோட்டார்களின் சொந்தக்காரர்கள் சம்பந்தப்பட்ட வாகனங்களை உபயோகிப்பது கண்டு பிடிக்கப்பட்டால் அவர்கள்மீது வழக்குத் தொடரப்படுமென்று பெட்ரோல கட்டுப்பாட்டதிகாரி திரு. ஜே.என். ஆறுமுகம சென்ற ஞாயிற்றுக்கிழமையன்று பத்திரிகை நிருபர் ஒருவருக்குப் பேட்டியளித்துப் பேசும்போது பின்வருமாறு கூறினார்.

'கார்'களைப் போக்குவரத்திலிருந்து நீக்கும் சட்டம் நடைக்கு வந்தபின் இப்படிப்பட்ட 'கார்கள' போக்குவரததிலீடுபடுவது ஒரு குற்றமெனக் கூறும் விதியொன்றை ஸதல ஸ்தாபன மந்திரி ஏற்படுத்தியிருக்கிறார்.

போக்குவரத்திலிருந்து நீக்கப்பட்ட 'கார்களின' சொந்தக்காரர்கள் அவர்களின 'லைசென்ஸ்'களைத திருப்பிக் கொடுத்துவிடும்படி செய்யப் பெற்றோல் கட்டுப்பாட்டதிகாரி தமது உததியோகஸ்தர்களுக்கும் மோட்டார்'கார்' 'லைசென்ஸ்' வழங்கும் அதிகாரிகளுக்கும் உத்தரவிட்டிருககின்றார். 'லைசென்ஸ்'களைத் திருப்பிக் கொடாதிருப்பவர்கள மீது அல்லது அக்'கார்'களை உபயோகிப்பவர்கள்மீது வழக்குத் தொடரப்படுமென்று அவர் கூறினார்.

# உலகம்பலவிதக் கதை

(முற்றொடர்)

## இது நல்ல சம்பந்தம்

அடுத்தநாட் காலை ஏழு மணி வரையில் முருகேசபிள்ளை, சண்பகத்தம்மாள், பணிப்பெண்ணாகிய மூவரும் தங்கள் வீட்டிற்கு மீண்டு வந்தார்கள். சுந்தரேசுவரன் நகுலேசுவரி என்னுமிருவருக்கும் நடந்த விவாக வைபவத்தைச் சண்பகத்தம்மாள் தம் பிள்ளைகளுக்குச் சொல்லிச் சந்தோஷப்பட்டாள், அன்று பின்னேரமும் தாங்கள் கல்யாணம் நடந்த வீட்டிற்குப் போதல் வேண்டுமென்பதையும் மக்களுக்குத் தெரிவித்தாள். இதற்கிடையில் மெனிக்காவை அங்குக் காணாமையினால் "மெனிக்கா எங்கே காணோமே" என்று சண்பகத்தம்மாள் மகனைக் கேட்க, மகள் குறிப்பாகத் தமையனைப் பார்க்க, அவன், "அம்மா, அந்த மெனிக்கா, முந்தி யாரோ ஒரு உத்தியோகத்தனுடைய வீட்டில் இருந்தவளாம்; அந்த உத்தியோகத்தன் அவளைத் தேடி வந்து வரும்படி கேட்டான்; அவளும் சம்மதித்து எங்களிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு அவனுடன் போய்விட்டாள்" என்று பொய் கலந்த மெய் சொன்னான். "உத்தியோகத்தன் வேறு எவனுமல்லன், அம்மா, அந்தச் செல்வராசன்" என்று வெறுப்புடன் சொன்னாள் காஞ்சனம். 'அப்படி அவனுடன் அவள் போனதினால் எங்களுக்கு ஒரு குறையும் வராதே" என்று மகனைத் தாய் கேட்க, "ஒரு குறையும் வராது; இன்னும் அவளுக்கு அதனால் நன்மை உண்டு" என்று பதில் சொன்னான் சொக்கலிங்கம், பின்னரும் சண்பகத்தம்மாள் மக்களைப் பார்த்து "நகுலேசுவரி ஒரு அருமையானபிள்ளை; அவளுக்கு வாய்த்த மாப்பிள்ளையும் நல்ல பிள்ளை; இது நல்ல சம்பந்தம்; ஏதோ அந்தப்பிள்ளைகளை ஆண்டவன் ஒரு குறைவும் வராமற் காத்து வைக்கவேண்டும்; அந்தப் பிள்ளையும் தகப்பனை யிழந்தபின் சிலகாலம் கஷ்டப்பட்டுவிட்டாள்; என் மகளே, உனக்குஒருகல்யாணம் நிறைவேறும்போது உண்டாகும் சந்தோஷத்தைக்காட்டிலும் மன ஆறுதலைக்காட்டிலும் இப்பொழுது எனக்கு அதிக சந்தோஷமும் மன ஆறுதலும் உண்டெடியம்மா" என்று சொல்லும்போது அவளுடைய கண்களில் அன்புநீர் ததும்பியது; காஞ்சனமும் அன்பும் ஆனந்தமும் பெருக "அம்மா, என் அருமையான அக்காளைப் பார்க்க எனக்கு ஆசையாக விருக்கிறதே" என்று சொல்லுதலும், "கண்ணே, நீ கவலைப்படாதே, உன் அக்காள் தன் புருஷனோடு நாளைக்குக் கோவிலுக்குப் போய்ச் சுவாமி தரிசனஞ் செய்து கொண்டு இங்கே வந்து உன்னையுங் கண்டு கொண்டுதான் தங்கள் வீட்டிற்கு மீண்டு போவாள்; நானே அவர்களைக் கோயிலுக்குக் கூட்டிக்கொண்டு போகவேண்டுமென்பது ஒழுங்கு" என்று தாய் சொல்லுதலும் அதனைக்கேட்ட மகள் சந்தோஷமடைந்தாள்.

## தனக்கெளியது சம்பந்தம்

இவர்கள் விஷயம் இவ்வாறாக, பொலிஸ் தலைவர் சொன்னபடி அடுததநாள் மத்தியானம் செல்வராசனும் மேனகாவும் கச்சேரிக்கு இரதத்தின்மீது சென்று விசேஷ அனுமதி பெற்றுக் கல்யாணம் பதிவு செய்துகொண்டு மீண்டு தங்கள் வீட்டிற்குப் போய் அன்று பொழுதுபட்டபின், 7 மணி வரையில் பொலிஸ் தலைவருடைய வங்களாவை அடைந்தார்கள். பொலிஸ் தலைவர் அங்கே வருபவர்கள் தம்பதிகளெனக் கண்டமாத்திரத்தே தமது மனைவியோடு அவர்களை வரவேற்றார். சில நிமிஷஞ் செல்வதற்கிடையில் செல்வராசனுடைய மனைவியைப் பொலிஸ் தலைவருடைய மனைவி உள்ளே யழைத்துச் செல்ல, பொலிஸ் தலைவர் சிறிது கவலையோடும் வெறுப்போடும காணப்படுவதைச் செல்வராசன் அவதானித்துக்கொண்டு அவனும் பேசாம லிருந்தான்; சில நிமிஷஞ் செல்ல அவர் அவனைப் பார்த்து "அந்தச் சிங்களப் பெண் எங்கே, அந்தப் பெண்ணையல்லவா, கல்யாணஞ் செய்யும்படி உமக்குச் சொல்லியிருந்தேன்; அப்படி நீர் செய்யாதபட்சத்தில் உமக்குத்தானே அவளாற் சங்கடம் நேரும், அவளை விட்டு இந்தத் தமிழ்ப் பெண்ணைக் கல்யாணம் செய்துகொண்டு இங்கே வந்தது மிகவும் புத்தியீனம்" என்று மெல்லச் சொல்லிக் கவலைப்பட்டார். இவைகளைக் கேட்ட செல்வராசன் புன்னகை செய்து "இல்லை, ஐயா, அந்த மெனிக்காதான் இப்பொழுது என்னுடன் வந்திருக்கும் பெண்; அவள் தமிழ் மணமகளுக்குரிய முறையில் ஆடை ஆபரணங்களை அணிந்திருக்கிறபடியாலும், அன்றும் இப்பொழுதும் இராக்காலத்திலேயே அவளை வித்தியாசமான உடையோடு பார்த்ததாலும் உங்களுக்கு வித்தியாசமாகக் காணப்பட்டாள்; நீங்கள் சொன்ன சொல்லைத் தட்டக்கூடாதென்ற நியாயத்தினாலும், அவள் என்னிடத்தில் உண்மையான விசுவாசம் பாராட்டுகிறாளென்பதை நான் யூகித்து அறிந்துகொண்டமையினாலும், விதியும் இப்படித்தான் இருக்க வேண்டுமென நினைக்கிறேன், அதனாலும் நானும் அவளிடத்து நிசமான காதல் கொண்டு அவளையே என் தாரமாகச் சைவ முறைப்படி அதிக ஆடம்பரமில்லாமல் எனது வங்களாவில் இன்று பகலே விவாகஞ் செய்துகொண்டேன்; அந்த நேரத்தில் இங்கே உத்தியோகமாக வந்திருப்பவர்களாகிய நமது ஊரிலுள்ள சில நண்பர்கள் தத்தம் குடும்பத்தோடு வந்து எனக்கு ஆகவேண்டிய உதவிகளையெல்லாஞ் செய்து எங்கள் கல்யாணத்தை நிறைவேற்றி வைத்தார்கள். மெனிக்காவும் மனப்பூர்வமாகச் சைவசமயப் பெண்ணாகிவிட்டாள். நீங்களும் உங்கள் அம்மாவும் எனக்குப் பிதாவும் மாதாவும்போல இருப்பதால் நான் முதன் முதல் இங்கு வந்தேன்; உங்களிருவருடைய ஆசீர்வாதமும் எமக்குக் கிடைக்கவேண்டும், இனி எனது நண்பர்களுடைய வீடுகளுக்கும் நாங்கள் போய் அவர்களைக் காணவேண்டும்" என்று சொன்ன மாத்திரத்தே பொலிஸ் தலைவர் தம்மளவில் முதல் வெட்கப்பட்டுப் பின்னர்ச் சந்தோஷத்துடன் செல்வராசனைப்பார்த்து "நீர் நல்ல கெட்டிக்காரன்; நீர் செய்தது சரி; நீங்கள் இரண்டு பேரும் எப்போதும் ஒருவருக்கொருவர் நேசமாக இருக்கவேண்டும்; தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக; நீங்கள் இடையிடையே இங்கே வந்து வந்து போகலாம்; அம்மாவும் நானும் உங்கள் வங்களாவுக்கு வருவோம்; நீர் வேலை மாறி வேறு ஸ்தானத்திற்குப்

(தொடர்ச்சி 5-ம்பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேதாந்ததரிசனம்

(திரு. வ. கந்தையா, கொழும்பு வானொலியில் பேசியது)

வேதாந்தம் என்னும் தொகைச் சொல்லுக்கு வேதங்களினுடைய அந்தம் என்பது பொருள். வேதங்களினுடைய அந்தம் இறுதிப்பாகங்கள், உபநிடதங்கள் ஆகும். வேதங்கள் நான்கு. ஆனால் உபநிடதங்கள் பல. இன்ன உபநிடதம் இன்ன வேதத்திற்கு உரியது என்று வகுக்கப்பட்டுள்ளது. இப்போது நான் சொன்ன சொற்பொருள் வேதாந்தம் என்ற சொல்லுக்கு ஒருகாலத்தில் இருந்ததாயினும் பின் இல்லாமல் போயிற்று. முதலில் உபநிடதங்களாகிய நூல்களைக் குறித்துநின்று பின் அந்த நூல்கள் நுவலும் அறிவுக் கொள்கைகளைக் குறித்து வருகின்றது. இந்த அறிவுக் கொள்கைகளைத்தான் தரிசனம் என்ற பெயரால் கூறுகின்றோம்.

உபநிடதங்களின் உட்கருத்து இதுஎன யாரும் துணிந்து சொல்லலாகாது. தாம தாம் கொண்ட கருத்துக்கு ஏற்ப வாக்கியங்களைப் பிரிக்கவோ, பிரித்துக்கொண்டு கூட்டவோ தக்கவாறு உபநிடதங்கள் அமைந்துள்ளன.

அதனால்தான் வெவ்வேறுகொள்கைகளையுடைய அத்துவைத வேதாந்திகள், விசிஷ்ட அத்துவைத வேதாந்திகள், துவைத வேதாந்திகள், சைவசித்தாந்திகள், வைஷ்ணவ சித்தாந்திகள் முதலியோர் தந்தம் மதத்திற்கேற்ப உபநிடதங்களுக்கு உரை எழுதியும், உபநிடதங்களை ஆதாரங்காட்டியும் வருகின்றனர். தாந்தாம் கொண்ட கருத்தே உபநிடதக் கருத்தென்பர். தம் மதமே உண்மை என்பர். அதனால் அறியக்கிடப்பது என்னவென்றால் உபநிடதங்கள் பொது நூல்கள் என்பதே.

உபநிடதங்களை அத்துவைத வேதாந்தத்திற்கே உரிமையாக்கும் வண்ணம் கௌடபாதர் என்றொரு தவமணி மாண்டூக்கிய உபநிடதத்திற்கு ஓர் உரை பாட்டில் இயற்றியுள்ளார். அவ்வுரைக்குக் கௌடபாதகாரிகை என்று பெயர். அஃது இன்றுமுள்ளது.

தானபெற்ற அறிவுச் செல்வத்தைத் தன் மாணவன் கோவிந்தருக்கு அளித்தனர். கோவிந்தர் தனனுடைய மாணவன் சங்கரனுக்கு ஈந்தார். சங்கரன் தனனுடைய மாணவராகிய குமாரிலர், சூரேஸ்வராசாரியர் முதலானோருக்குத் தந் திருவாயால நல்கியதோடு அமையாது கல்விமான்கள் தவயோகியர் தம் கண்ணால கண்டும காதால் கேட்டும தெருமாறு ஏட்டில விட்டுளளான். சங்கரன ஈட்டிய அறிவுச்செல்வம் இன்றுவரை நிலவி, இந்திய எல்லையையுங் கடந்து உலகெங்கும பாவிவருகின்றது. இந்தச் சங்கரனே பின்னாளில உலகப்புகழ் பெற்ற சங்கராசாரியர்.

இந்தச் சங்கராசாரியரைப்பற்றி இந்துக்கள் யாவரும் அத்துவைத வேதாந்திகள் அல்லராயினும, ஒருமட்டுக்கு அறிந்திருக்கவேணடும்.

இவர் ஏறக்குறைய 1500 ஆண்டுகட்கு முனனர் இருந்தவர். ஒரு தென்னிந்தியர். மலையாள நாட்டினர். நம்பூதிரி பிராமண குலத்தவர். சிறுவயதிலேயே அதிநுட்ப புத்தியுடையராய் விளங்கினர். கோவிந்தர் தலைமை வகித்த ஒரு வைதிக பள்ளியில் படித்தார். வைதிகபள்ளிகள் வேதங்களைப் படிப்பித்தலையே சிறந்த நோக்கமாகக் கொண்டுள்ளவை. இன்றும் இந்தியாவில வேத வித்தியாலயங்கள் பலவுள. சங்கரர் வேதங்களை மிக்க ஆவாவுடன் அருந்தினர். வேதங்களின நுண்பொருளகளில திளைத்தனர்.

இவ்வாறு சங்கரர் வேதங்களில் ஈடுபட்டது 8 வயதில் என்பர். அரிய பெரிய நூல்களைச் சிறிய வயதிலேயே கற்றுவிட்டார் என்ப. அதனால் நூற்புலமையில் நிபுணர். புத்தியில நுண்ணியர். இனி, உலக இன்பம் அவரை அடிமைப்படுததுமுன்னம் அவற்றை வெறுத்து துறவொழுக்கம் நாடினாராம. அவரின் நூலகளிலிருந்து அவர் தவத்திலும் தெளிந்தவர் எனலாம். ஊரூர் சென்று பிறசமயத்தாரையும் வென்றவராதலால வாதத்திலும் வல்லுநராய் விளங்கினர்.

ஒருமுறை மீமாஞ்சைப் புலவனான மண்டனமிசிரரோடு வாதம் நிகழ்த்த விரும்பினர். மண்டனமிசிரரின மனைவி சங்கரரின் முன் வந்து தன்னை வென்றாலொழியத் தன் கணவனோடு வாதம் புரிய முடியாதென்றாள். அவளையும் வென்று அவள் கணவனையும் வென்றாராம். மண்டன மிசிரரே சூரேஸ்வராசாரியர் என்னும் மறுநாமத்தோடு சங்கரரின் மாணவரானார் என்பது கதை. மற்றை மீமாஞ்சைப் புலவன் குமாரில பட்டரையும் வாதில் வென்று மாணவராக்கினர் என்பதும் கர்ணபரம்பரைக் கதை. குமாரிலர் காலத்தால் முந்தியவர் என்பது ஆராய்ச்சியாளர் கொள்கை.

ஊரூராய்த் திரியும்போது ஆங்காங்கு கண்ட அசுத்த வழிபாடுகளை அகற்றி, சிறந்த வழிபாடுகளைச் சொல்லிக் கொடுத்தார். தக்கிண தேசத்தில் மல்லாரி என்னும் பெயருடன் சிவனை நாயாக மக்கள் வழிபட்டனர். உடனே அவ்வழிபாட்டை நிறுத்திவிட்டார். காபாலிகர் என்னுஞ் சாதியார் மனித உடலை உணவாக உண்பவர். தலை ஓட்டைக் கையில் ஏந்தி அதில் பிச்சை வாங்குபவர். வாஙகி அதில் உண்பவர். எமக்குப் பீங்கான்போல அவருக்கு மண்டை ஓடு. அவர்களின் கடவுள் வைரவர். மயானத்தில் பிணம் எரிபடாமல் கிடந்தால் அவர்கள் தூக்கிக்கொண்டுபோய்த் தின்பர். அந்தக் காபாலிகர் இன்றும் காசியிலும், கங்கைக்கரையின் பிற பாகஙகளிலும் உளர். அவர்கள் சங்கரர காலததிலும் இருந்தனர். சங்கரர் அவர்களின் சமபிரதாயங்களை ஒழித்தார் என்பது கதை.

வேதாந்தத்துக்கு முதல் நூல்கள் உபநிடதங்கள் என்றேன். பிரதானமான உபநிடதங்களுக்குச் சங்கரர் உரை வகுத்துத் தன் கொள்கையை நிறுவினர். அவர் உரைவகுத்த உபநிடதங்களாவன சாந்தோக்கியம், பிருகதாரணியகம், தைத்திரீயம், மகாஐதரேயம், ஐதரேயம், சுவேதாசுவதரம, கேனம், கடம், ஈசம, பிரஸ்னம, முண்டகம், மாண்டூக்கியம. இவ்வுரைகள் இன்றுமுளளன. மேலும் பிரமசூததிரத்திற்கும, பகவத்கீதைக்கும உரைகண்டார். தாமே இயற்றிய நூல்கள் விவேகசூடாமணி, தக்ஷிணாமூர்த்தி தோத்திரம, அபரோக்ஷானுபூதி முதலியன.

திருவண்ணாமலையில் உறையும் மகரிஷி இரமணரும் சங்கரரின் விவேக சூடாமணியைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார் என்பதிலிருந்து சங்கரரின் பெருமையை விளங்கிக்கொள்ளுங்கள். சங்கரர் 32-ம் வயதில இறந்தார் என்பர். (வரும்)

# "இருபெருநிதியம்"

(சோம சரவணபவன்)

'சலியாத கற்பகரு' என வியந்து பாராட்டப்படும் நலங்கனிந்த பண்புடையாரை அண்டினால் என் ஆசை தீர விரும்பின பொருள் பெற்றுக் கொள்ளலாம் என்னும் எண்ணம் என்னைத் தூண்டவே நானும் அந்த வள்ளலகளிருக்குமிடம் எங்கே யென்று சற்றே விசாரித்தறிய ஆரம்பிக்கலானேன், விசாரித்துப் பார்த்த பொழுது எனக்குண்டான ஆச்சரியத்தை என்னென் றெடுத்துரைப்பேன்! கற்பகதரு எனப் புகழ் படைத்தவர்களே மேலும் திரவியந்தேடும் பொருட்டு எங்கேயோ புறப்பட்டுப் போய்விட்டார்களாம என்று கேள்விப்படும் பொழுது ஆருக்குத்தான் ஆச்சரியமுண்டாகாது! ஆகவே அவர்களெங்கே சென்றார்களென்று முதியோர் சிலரைக் கேட்டேன். அதற்கு அம்முதியோர், 'நடுவுநிலை, என்றொரு நெடுநகருண்டு. அங்கே போனால் அவர்களைக் காணலாம். அங்கே போக விரும்பினோர் மெய் வருததம் பாரார்; பசி நோக்கார்; கண்டுஞ்சார்; எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்; செவ்வி அருமையும் பாரார்; அவமதிப்புங் கொளளார். குடிப்பிறப்புடுத்துப் பனுவலசூடி விழுப்பொருள் ஒழுக்கம பூணடு காமுற வாய்மை மடுதது மாநதித் தூய்மையின் காத லினபத்துள்ளே தங்கிச் செல்வர். அப்படித்தான அவர்களும் அந்நகரை யடைநதார்கள். அவர்கள் சென்றவழியே செல்வாயானால உனக்குக் காரியசித்தி உண்டாகும்'' என்றனர். அந்தப் பொன் மொழியை நயமறிதலுடன் கொண்டு ஆழ்ந்த யோசனைக் கடலுள் மூழ்கலானேன்.

எத்தனையோ நகரங்களிருக்கவும் அந்தச் சான்றோர் 'நடுவுநிலை' என்னும் நகரத்தைத் தெரிந்தெடுத்தார்களே; பிறநகரங்களிலே பொருள் சம்பாதிக்க முடியாதோ என்பதைப் பற்றி யோசித்துக் கொண்டிருக்கையிலே, நடுவுநிலைமை யில்லாத இடங்களிலே 'வேதாளஞ் சேருமே வெள்ளெருக்குப் பூக்குமே பாதாளமூலி படருமே மூதேவி சென்றிருந்து வாழ்வளே சேடன் குடிபுகுமே' என்பது ஞாபகத்திற்கு வரவே, நடுவுநிலை நகரின் சிறப்பு எத்தகையது என்பது தானாகவே புலப்படலாயிற்று. கொள்வது மிகையுங் கொடுப்பது குறையுமாகாமல தம பொருளையும பிறர் பொருளையும் ஒப்பக் கருதி வித்தியாசம வகுக்காமற் கொண்டும் கொடுத்தும பொருள் திரட்டுதலே உத்தம வணிகர்தம இலக்கணமாதலினாலே பொருளீட்டப் புறப்பட்ட அச்சான்றோர் அந்நகரைத் தேடியடைந்தது மிகவும பொருத்தமானதே என்பதையும் உணரலானேன்.

அந்நகரில் அவர்களீட்டிய பொருள் யாதென விசாரித்துப் பார்த்தேன். 'இரு பெருநிதியம்' சம்பாதித்தனர் என்று கேள்விப்பட்டேன். 'இருபெருநிதியம்' என்றவுடனே சங்கநிதி பதுமநிதி என்னுமிரண்டினுடைய ஞாபகமே எனக்குண்டாயிற்று. அவைதாமாகும என்று எண்ணும்போது, ''அழுக்காறின்மை அவாவின்மை என்றிரு பெருநிதியம்'' என்றொரு தொனி என்காதில் விழவே, ஆச்சரியம் மேனமேலும் பொங்கலாயிற்று. 'என்னே! காடுமலை கடந்து கடல் தாண்டி நெடுந்தூரஞ் சென்று பாடுபட்டதெல்லாம் இந்த இரணடையுந் தேடுதற்கோ? இவையுமொரு செல்வமோ?' என்று பலவாறு சிந்திக்கலானேன். அப்பொழுது ''அழுக்காறெனவொரு பாவி திருச்செற்றுத் தீயுழியுய்த்துவிடும்,'' ''அவ்வித் தழுக்காறுடையானைச் செய்யவள் தவ்வையைக் காட்டிவிடும்,'' 'வேண்டாமை யன்ன விழுச் செல்வமீண்டில்லை யாண்டுமஃ தொப்பதில்' என்றொருபுறம் திருவள்ளுவநாயனார் முழங்கிக் கொண்டிருப்பது கேட்டது. இன்னொருபுறம் குமரகுருபரசுவாமிகள் தேனொழுகு மினிய அமிழ்தம் பெய்து நிரப்பி,

"கொடியு முரசுங்
கொற்றவெண் குடையும்
பிறர்கொளப் பொருஅன்
றூனே கொண்டு
பொதுநீங்கு திகிரி
திசைதிசை போக்கிச்
செவியிற் கண்டு கண்ணிற் கூறி
இருநிலம் புரக்குமொரு
பெருவேந்தன்
மிக்கோ னொருவன்
வெறுக்கை நோக்குழித்
தொக்கதன் வெறுக்கை
சுருங்கித் தோன்ற
இழப்புறு விழுமமெய்தி
யழுக்கறுத்து
மற்றது பெறுதற குற்றன தெரீஇ
அயிற்சுவை பெறாஅன்
றுயிற்சுவை யுறாஅன்
மாணிழை மகளிர்
தோணலங் கொளாஅன்
சிறுகாறறு வழங்காப்
பெருமூச் செறிந்து
கவலையுற் றழிவதூஉங்
காண்டும் விறலெடுத்
தூர்தொறுஞ் சுமந்து
விற்றுக் கூலிகொண்டு
புற்கையு மடகு மார்ந்தி
மக்களொடு
மனையும் பிறவு நோக்கி
யயன்மனை
முயற்சியின் மகனை
யிழித்தன னெள்ளி
எனக் கிணையிலையென
வினையன் மற்றொருவன்
மனக்களிப் புறீஇ மகிழ்வதூஉங்
காண்டும், அதனால்
செல்வ மென்பது
சிந்தையி னிறைவே
அல்கா நல்குரவவா
வெனப்படுமே
ஐயுணர்வடக்கிய
மெய்புணர் வல்லதை
உவாக்கடல் சிறுக
வுலகெலாம விழுங்கும்
அவாக்கடல் கடத்தற்
கரும்புணை யின்றே....,
..........................''

என்று விரித்து விளக்கிப் பாடிக் கொண்டிருப்பது கேட்டது.

சான்றோர் பலரும் இந்தப் பெருநிதிய மிரண்டையுமே எங்களுக்குச் சிபாரிசு பண்ணுவது கண்டேன். எல்லோரும் இவைகளைச் சம்பாதித்து உய்வோமாக.


## தமிழ்ச்சங்கச் சேவாசிரமம்

பருத்தித்துறை

ஷ ஆசிரமத்திற்கு 12—21க்கு மிடை வயதான தமிழ் மாணவர்கள் தெரியப்படுவர். தமிழ்; ஆங்கிலம், இன்னும் மற்றைப் பள்ளிப்பாடங்கள், கைத்தொழிற்பயிற்சி, உணவு உடை எல்லாம் இலவசமாக அளிக்கப்படும். படிப்பு பொதுவாக 5 வருடத்தில் நிறைவாகும். அதுவரை ஆசிரமத்தில் சீவிக்கவேண்டும். அதன்பின் தொழில் கொடுக்கப்படும். முதற்றரமான மாணவர்கள் உயர்தரப் படிப்புக்காக இந்தியாவுக்கு அனுப்பப்படுவர். சேரவிரும்பும் மாணவர்கள் பெற்றாரின் சம்மதம் பெற்று 2 நற்சாட்சிப் பத்திரத்துடன் 1943ம்௵ ஆவணி௴ 15ந் திகதிக்கு முன் எனக்கு மனுச்செய்யவேண்டும்.

மு. கார்த்திகேசு,
தமிழ்ச் சங்கத் தலைவர்,
பருத்தித்துறை.

(Mis. 91. 26 & 29.7.43)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழமண்டலச் சரித்திர தீபம்

## ஆரியச்சக்கரவர்த்திகள் என நாமம்பூண்ட யாழ்ப்பாணத்து மன்னர்கள்

(கொழும்பு கோட்டாஞ்சேனை, திரு. வை. முத்துக்குமாரசுவாமி)

I

(முற்றொடர்)

வட இலங்கையின் கடற்கரைக்கண், பருத்தித்துறையில் இருந்து தென்கிழக்கே இருமைலுக்கப்பால் வல்லிபுரம் என்னும் தலம் இருக்கிறது. வல்லிபுரக் கோவிலில் இருந்து, வடக்கே ஒரு மைல் வரைக்கும் மணற்கும்பிகள் காணப்படுகின்றன. அங்கு பல இடங்களிற் கிடக்கின்ற பூர்வகாலக் கலவோடுகள், கிச்சுக்கிட்டம்; நகைகள் ஆகிய பல பண்டைச் சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இவைகளிலிருந்து இங்கே பழைய நகர் இருந்ததென்பதும் இதுவே பூர்வகாலச் சிங்கை நகர் என்பதும் சரித்திர ஆராய்ச்சிவிற்பன்னராகிய முதலியார் இராசநாயகம் அவர்களின் மதியூகமான முடிபு. சுவாமி ஞானப்பிரகாசர், முதலிய சரித்திர ஆராய்ச்சியாளரும் இது சரியெனக் கொள்வர். அக்காலத்தில் சிங்கை நகர் பெரிய துறைமுகமாக விளங்கிற்று. இந்தியா, சீனா, அராபியா முதலிய தேசங்களிலிருந்து பல பண்டங்களை அனுப்பிப் பண்டமாற்றம் செய்தனர். வல்லிபுரத்துக்கு நேரேயுள்ள கடலோரம் அக்காலந்தொட்டு குடத்தனை அல்லது குடக்கரை என்றும் குடாவலிகம என்றும் வழங்கப்பட்டு வந்தது. இங்கு கப்பல்துறை என்றும் ஓர் இடம் உண்டு.

ஈழமண்டலத்தில் முதன் முதல் சக்கரவர்த்திப் பட்டம் பெற்றவன் சிங்கையாரியச் சக்கரவர்த்தியே. இவனைப்பற்றி முத்துராசக் கவியால் எழுதப்பட்ட "கைலாயமாலை" கூறுவது பின்வருமாறு:—

"தென்னன் சிகரான செகராசன்
தென்னிலங்கை
மன்னவனுகுஞ் சிங்கை யாரியமால்"

என்பவன் மதுரையை ஆண்ட பாண்டிய சேகரனின் மகன் என்றும், வட-இலங்கையில் அரசனில்லாமல் காடு பாழாய்ப்போகிறதென்றும், அதனால் சிங்கை ஆரியன், மதுரையிலிருந்து புவனேக மந்திரியுடன் வந்து யாழ்ப்பாணத்து நல்லூர் இராச்சியத்தைத் தாபித்தான் என்றும் கூறுப.

தமிழ்ச்சங்கம் தாபித்துத்தமிழ்ப் பயிரை வளர்த்தான். வரம்புயர நாடு உயரும் என்னும்கொள்கையை நன்கு உணர்ந்திருந்தான். மதுரைச் சொக்கலிங்கத்தின் திருவுருவத்தை அமைக்க உறுதிகொண்டு கைலாய நாதர் கோவிலைக் கட்டினான். சேதுபதியிடம் கங்காதரக் குருக்களை அழைப்பித்து அக்கோவிலுக்குக் கும்பாபிஷேகம் செய்வித்தான்: கயிலாயமாலை சுட்டிய குடியேற்றம் 13ம் 14ம் நூற்றாண்டுகளில் நிறைவேறியிருக்கலாம் என்பர் முதலியார் இராசநாயகம். மயில்வாகனப் புலவர் எழுதிய வைபவமாலை, 18ம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. இது கைலாயமாலையிற் கூறியனவற்றையும், பராச சேகரனுலா, இராசமுறை, வையை பாடல் முதலியவற்றையும் ஒட்டி எழுதப்பட்டதாம். ஆயினும் அவ்வைபவமாலையில தற்கால ஆராய்ச்சிக்கு முரண்படும் விஷயங்கள் சிலவற்றைக் காணலாம் அவற்றை ஒவ்வொன்ருக ஆராய்வோம்.

சிங்கை ஆரியச் சக்கரவர்த்தியே வடஇலங்கையில் தனிச் செங்கோல் ஓச்சிய அரசர்களுள் முதலானவன். இது முழுவதும் நம்பத்தக்கதன்று. ஏனெனில், வட இலங்கை ஆதியில் விதானைமாராலும், ஆராய்ச்சிகளாலும் முதலியார்மாராலும் ஆளப்பட்டது. பின்னரே அரசர்கள் தோன்றினர். சிங்கை ஆரியன் சோழநாட்டிலிருந்து மதுரைக்குக் கல்வி பயிலவந்த சோழ மன்னல்; அவனே விசய கூழங்கைச் சக்கரவர்த்தி என்றழைக்கப்பட்டவன் விசய சிங்கையாரியன் சோழனுமல்லன், பாண்டியனுமல்லன, கூழங்கையனு மல்லன் இவன் கங்கை குலத்துக் காலிங்க வம்சத்தவன். "காலிங்க" ஆரியச் சக்கரவர்த்தி என்று கைச்சரவைகளில் குறித்ததை அறியாதோர் "கூளங்கை" என மயங்கித் தடுமாறினர். இது முதலியார் இராசநாயகம் அவர்களின் சாதுரியமான ஊகம். மேலும் வைபவமாலை சிங்கை நகருக்கு செங்கடக நகர் என்றது ஓர் ஏமாற்றம். ஏனெனில 12ம் நூற்றாண்டில் கண்டியில ஓர் இராச்சியமும் இருக்கவில்லை. இங்கு காலிங்க ஆரியச்சக்கரவர்த்தி என குறிக்கப்பட்டவன் யார்?

காலிங்க மாகன் என்பவன் கி. பி. 1215-1242 வரையும் பொல்லநறுவையிலிருந்து இலங்கை முழுவதிலும் தனிக்கோல் செலுத்தினன், மாகன் ஊராத்துறை, கூடவலிகாமம் (சிங்கைநகர்) தமிழ்ப்பட்டணம், மன்னார் முதலிய இடங்களில கோட்டைகள் கட்டினதாக 'நிக்கய சங்கிரகம்' என்னும் சிங்கள இதிகாசம் கூறும். காலிங்க மாகன், புலத்தியில சக்கரவர்த்தியாக அரசாண்டான். ஜயவாகு என்னும் கங்கை வம்சத்து காலிங்கன் யாழ்ப்பாண நாண்டை ஆண்டான். இவ்விருவரையுமே "பைந்தொடைப்பாசுபதர்களைஞ்னூற்றுப் பனனிருவரில்" காசினி தாமதுய்படிவாம் அடைந்த இருவராம் எனச் செகராசசேகரமாலை கூறிற்று. பாதர் கைமுருஸ் சுவாமி குறித்துள்ள இராமேசுரத்தினின்று யாழ்ப்பாணத்துக்கு வந்தான் ஓர் ஆரிய அரசன் என்னும் ஐதிகம் கலிங்கத்து ஜயவாகுவையே கருதும். ஜயவாகுவே உக்கிரசிங்கனும், வைபவமாலையிலும், கல்வெட்டிலும் கூறப்பட்ட குளக்கோட்டனுவது சாலும். ஜயவாகு மாண்டபின் மாகன் யாழ்ப்பாண இராசதானியை இனிதாய் நாட்டினன். ஜயவாகு இறந்ததன் பின்னர் 1242 அளவில் உள்நாட்டுக் கலகம் விளைந்து நாடு பாழாய்ப் போனது உண்மைச் சம்பவம் எனலாம். புலஸ்திய நகரிலிருந்து இருபத்தேழு வருடங்களாக இலங்கை முழுவதையும் கட்டி ஆண்ட காலிங்க மாகன் "சிங்கை ஆரியச் சக்கரவர்த்தி" என மகுடஞ் சூட்டப்பட்டு, சக்கரவர்த்தி எனும் பெயர் தாங்கியது இயல்பே. காலிங்க மாகனைக் காலிங்க விஜயவாகு என்று மகாவம்சம் மறுநாமங் கொடுத்து வழங்கியிருக்கிறது. இராசறத்நாகரி என்னும் சிங்கள நூலில் கூறப்படும் காலிங்க விஜயவாகு என்பவனையே, நிக்கய சங்கிரகம் காலிங்க மாகன் என்கிறது. காலிங்க மாகனுக்குச் "செயசிங்க வாரியன்" எனனும் பெயர் இருந்திருக்கலாம். விசய சிங்கை ஆரியச் சக்கரவர்த்தியின் பட்டாபிஷேகத்திற்கு அநுராதபுரத்திலிருந்து அரசு செய்த சோழகுலத்தவன் சென்றிருந்தான்.

சிங்கை ஆரியச் சக்கரவர்த்தி தனது நாடும் அரசும் காப்புக் குறைவு சிறிதும் இல்லாது இருக்குமாறு வேண்டிய விளையுட்களையும் குளம் பாய்கால் வடிகால்களையும், அலங்காரமான பெரியமாளிகையும், அரணும், மதிலும், அகழியும், சிங்காரவனமும் அமைப்பித்தான். இவைகளை நல்லூரில் அமைத்தான் என்றே கைலாயமாலையும், வைபவமாலையும் பகர்கின்றன. அது பொருந்தாது: சிங்கை நகரிற்றான் சிங்கையாரியன் தாபித்த தலைநகரி என்பது தற்கால ஆராய்ச்சியாளரின் கூற்று. கி. பி. 1246ம் ஆண்டளவில் நல்லூரை நிர்மாணித்து அங்கு சிங்கைநகர் என்னும் பலத்த அரணை இம்மன்னன் நிறுவினன் எனலாம், சிங்கை நகரிலிருந்து ஆட்சி செய்த மன்னன் முன்னோரின் பெயரை மறக்காமல் சிங்கை ஆரியச் சக்கரவர்த்தி எனப் பெயர் பெற்றான். இம்மன்னன் மந்திரி பிரதானிகளுக்கு மாளிகையும், அந்தணர், வணிகர், வேளாளர்களுக்கு இருக்கையும் வீதிகளும், யானைப்பந்தி, குதிரைப்பந்தி, யானை குதிரைபேற்றச் சாரி வீதிகளும் செய்வித்தான். ஆனைப்பந்தி என்னும் இடம் நல்லூருக்குப் போகும் வழியில் இருக்கிறது.

சிங்கை ஆரியன் நகரத்துக்குக் கிழக்கே வெயிலுகந்த விநாயகர் ஆலயத்தைக் கட்டினான். அக்கோவிலின் மூலஸ்தானத்துக்கு நேரே வெய்யில் படக்கூடியதாக அமைக்கப்பட்டது, ஆகவே, அப் பெயர் பெற்றது. அப்பெயருள்ள கோவில நல்லூரில் உண்டு. மேற்கே வீரமாகாளியம்மன் கோவிலைக் கட்டினான். தமிழ்ப் போர்வீரர்கள் வீரமாகாளியம்மன் கோவிலைக் கட்டினான். தமிழ்ப் போர் வீரர்கள் வீரமாகாளி அம்மனுக்கு முன் வந்து ஆணையிடுவது வழக்கம். பழைய கோவில் இருந்த இடத்திற்றான் இக்கோவில் இன்றும் இருக்கின்றது எனப் பெரியோர் கூறுவர். இதற்குச் சான்ருக சிவன் கோவில் அணித்தாக உள்ள வளவு மின்னெறிஞ்சான் வளவு, என்றும் அதற்கு அடுத்தது பண்டாரன் பட்ட வளவு என்றும் தமிழ் மன்னர் காலத்தில் வழங்கப்பட்டு வந்தது. மின்னெறிஞ்சான் வளவில சகல படைக்கலங்களும் வைக்கப்பட்டன, கந்தசுவாமி கோவிலுக்கும் வீரமாகாளி கோவிலுக்கும் இடையேயுள்ள இடம் போர்க்களமாக இருந்தது. தெற்கே கைலை விநாயகர் ஆலயத்தை மன்னன் அதி அலங்காரமாக அமைத்தான. (இது 17ம நூற்றாண்டளவிலதான் அமைக்கப்பட்டதாகலாம்) கைலாய பிள்ளையார் கோவில் என்று இப்போதுள்ள கோவில் பழைய பெயர் கொண்டு பிற்காலத்தில அமைக்கப்பட்ட கோவில், நல்லூருக்கு வடக்கே சட்டநாதர் கோவிலை ஊர்ப்பாதுகாப்புக்காக ஆரியச் சக்கரவர்த்தி அமைப்பித்தான். இன்றுள்ள கோவில் பழைய பெயர் கொண்டு தற்காலத்தில கட்டுவிக்கப்பட்டது.

சட்டநாதர் கோவிலுக்கு அணித்தான வளவு சங்கிலித்தோப்பு என வழங்கப்பட்டு வருகிறது. சங்கிலி என்பவனே யாழ்ப்பாணத்தை ஆண்ட ஆரியச் சக்கரவர்த்தகளின் வழியில வந்த கடைசி மன்னன். இது இப்பொழுது செட்டியார்தோட்டம எனவும வழங்கப்படுகின்றது. வண்ணைச் சிவன் கோவிலின் ஆஸ்தியாக இருக்கிறது. இதுவே ஆரியச் சக்கரவர்த்திகளின் சிங்கார வனமாம், அவர்களின் மாளிகை இங்கு இருந்தது. சிங்கையாரியச் சக்கரவர்த்தி பூங்காவனத்தின் நடுவே ஸ்நான மண்டபமும், அமைத்து ஓர் அழகான கிணறும் வெட்டுவித்தான். யமுனை நதித் தீர்த்தத்தை அந்தணரைக் கொண்டு காவடிகளில் எடுப்பித்து அதில்விட்டு அதற்கு "யமுனையேரி" எனப் பெயர் இட்டான். இது "யமுனரி" என வழங்கப்படும். இது சங்கிலித்தோப்பில் உள்ள ஆழமான கிணற்றின் பெயர். சிங்கையாரியச் சக்ரவர்த்தி ஈழநாட்டில் தமிழ் அறிவை வளர்க்க ஒரு தமிழ்ச் சங்கம் அமைத்தான். அச்சங்கத்தாருக்கு மானியமாகச் சங்கவேலி (இப்பொழுது சங்குவேலி எனப்படும) கிராமத்தையும் சங்கத்தார் வயலையும் வழங்கினான். சங்கமென்பது 'புத்த சங்கம்' எனத் தப்பாகவிளங்கி மலைவாரும் உண்டு.


## ஓரியன்ரல் பாங்க் ஓவ் மலாயா லிமிற்றெட்

(ஐக்கிய மலாய் நாடுகளில் பங்காளரின் நிதி வரைவுளதாய் நிறுவப்பெற்றது)

### 8, மணிக்கூட்டுத்தெரு, யாழ்ப்பாணம்

மாட்சிமைதங்கிய தேசாதிபதியவர்களின் அனுமதியும் அங்கீகாரமும் பெற்று வடஇலங்கையில் சகலவித வங்கித்துறைகளிலும் ஈடுபட்டு உழைக்கும் **தேசீயவங்கி** இது ஒன்றே.

இவ்விடத்தில்:—

1. நடைமுறை, நிரந்தரக் கட்டணங்கள் ஏற்றுக்கொள்ளுதல்;
2. அங்கீகரிக்கக்கூடிய தகுந்த பொறுப்புக்கு இலகுவானமுறையில் வட்டிக்குக் கடன்கொடுத்து வாங்குதல்;
3. இந்தியாவின் சகல பட்டினங்களுக்குத் தந்தியுண்டியல்களும்; கொழும்பு, மதுரை, சேலம், சென்னை, தூத்துக்குடி முதலிய இடங்களுக்குச் செக்குகளும், உண்டியல்களும் பரிமாறுதல்;
4. இந்திய நோட்டுகள் வாங்குதல் விற்றல் முதலியன சகலருடைய வசதிக்குமேற்ப நடைபெற்று வருகின்றன.

எஸ். பீ. யோசேப்,
மானேஜர்.

(Mis. 206. 25-2-43—24-8-43. (வி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகம்பலவிதக்கதை

2ம் பக்கத் தொடர்ச்சி

போகவேண்டாம்; இப்பொழுது இருக்குந் தானத்திலேயே முறையாகக் கடமை பார்த்துக்கொண்டு இன்னமுஞ் சில ஆண்டுகளுக்கு இருக்கலாம்'' என்று ஆர்வத்தோடு சொல்லுதலும், செல்வராசன் "ஐயா, சொல்லுகிறபடியே செய்கிறேன்; நீங்கள் செய்யும் நன்றியை மறக்கமாட்டேன்" என்று வணக்கத்தோடு சொன்னான். "நல்லது, நான் சொன்னபடியால் இந்தச் சம்பந்தத்தைச் செய்தீரோ, இது உங்கள் பெற்றாருக்கு சுற்றத்தாருக்கு விருப்பமாக விருக்குமோ, ஒன்றையும் ஒளியாமற் சொல்லும்'' என்று மீளவும் பொலிஸ் தலைவர் கேட்க, செல்வராசன் "ஐயா, தொடக்கத்தில் இவளை மணஞ்செய்ய எனக்கு விருப்பமில்லை; ஆனால் என்னுடன் அன்று கூடிக்கொண்டு வந்தபிறகு இவள் என்னிடத்து விசுவாசமும் மெய்யன்பும் வைத்தவளாகக் காணப்படுகிறாள்; தனக்கெளியது சம்பந்தம் என்று எங்கள் பாஷையில் ஒரு பழமொழியுண்டு; இவள் பரம ஏழையாதலினால், சீதனச் செருக்குள்ள பெண்களைப்போல இவள் கணவனை அவமதித்தலின்றிப் பத்திவிசுவாசத்தோடு பணிசெய்வாள்; இவளுக்கு என்னையொழியத் தஞ்சம் பிறரில்லை; ஆனதால் இவள் நல்ல மனைவியாக இருப்பாளென்று நினைக்கிறேன்; இனி என் சுற்றத்தார் நான் செய்த இச் செயலுக்கு உடன்படுவாரோ அல்லரோ நான் அறியேன். என்பெற்றாருக்கு நான் ஒரேயொரு பிள்ளை; தகப்பனார் இற்றைக்குச் சில வருடங்கட்கு முன் காலஞ்சென்றுவிட்டார்; அதன் பின்பே என் முந்தியதாரம் மோசம்போயது; வயசுசென்ற என் தாயார் இவள் விஷயமாக உள்ள வரலாறு முழுவதையுஞ் சொன்னால் இவளைத் தம் மருமகளாக ஏற்றுக்கொள்ளக்கூடும். அல்லாமலும் என் தாயாருக்குத் தலைவிதியில் நம்பிக்கையுண்டு; எங்கள் முன்னோரும் இப்படி வேற்றுச் சாதியிற் பெண் கொண்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது; இடும்பையெனப்படும் ஒரு இராக்கதப் பெண் பஞ்சபாண்டவருள் ஒருவனாகிய வீமனைக் காதலித்தாளென்றும் தன்னை மணஞ் செய்யும்படி அவள் அவனைக் கேட்டபோது அவன் சாதிவேற்றுமை பற்றி அவளைத் தனக்கு மனைவியாகக் கொள்ள மறுத்தானென்றும், பின்னர் வீமனுடைய தாயாகிய குந்திதேவிக்கும் தமயனாகிய தரும புத்திரனுக்கும் அந்த அரக்கமகள் போய் முறையிட, அவர்கள் அவள்மேற் பரிவுகொண்டாராய், அவளை விவாகஞ் செய்யும்படி வீமனுக்குப் பணித்தார்களென்றும் அப்படியே அவளை வீமன் மணந்தானென்றும் அந்த இடும்பை பெற்ற பிள்ளையே வீரருள் வீரனான கடோற்கசனென்றும் பாரதத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. தாரமுங் குருவும் தலைவிதியென்று எங்கள் நாட்டிலே சொல்லுவார்கள். ஆனதால் என் தாயாரும் இதற்கு உடன்படுவார் ஐயா'' என்று சொல்லி முடித்தான்; பொலிஸ் தலைவர் இவைகளையெல்லாங் கேட்டுக்கொண்டிருக்கும் போது, பொலிஸ் தலைவருடைய மனைவியும் மேனகாவும உள்ளேயிருந்து அங்கே வந்தார்கள்; பொலிஸ் தலைவர் மேனகாவைப் பார்த்து அவளைப் பாராட்டி அவளுக்குப் பல புத்தி சொல்லி, உடனே தமது "செக்" புத்தகத்தை எடுத்து 250 ரூபாத் தொகைக்கு ஒரு "செக்" எழுதி ஒரு காகித உறையுள் வைத்து மெனிக்காவுக்கு வெகுமதியாகக் கொடுத்தார்; அதனைக் கண்ட அவர் மனைவியும் தன் கைவிரலிலிருந்த மோதிரமொன்றைக் கழற்றி மேனகாவின் விரலில் தானாக இட்டுச் சன்மானித்தாள், தம்பதிகளிருவரும் அவ்விருவரிடத்தும் விடைபெற்றுக்கொண்டு மீண்டனர்.

### உத்தமபத்தினி

நகுலேசுவரியிடத்துள்ள உத்தம குணங்களெல்லாம் அவள் விவாகஞ் செய்யும்வரை, குடத்துள்வைத்த தீபம் போல, பிரகாசித்தலின்றிப் பிறரால் அறியப்படாத நிலையிலிருந்தன; விவாகம் நிறைவேறியபின் அவனிடத்து இயல்பாகவே அமைந்திருந்தசுகுணங்களும் நற்செயல்களும் குன்றிலேற்றிய தீபம்போற் பிரகாசமுறலாயின வெனலாம்.

"கணவனுக் கினியளாய் மிருதுபாஷி
யாய்மிக்க
கமலைநிகர் ரூபவதியாய்க்
காய்சின மிலாளுமாய் நோய்பழி
யிலாததோர்
கால்வழியில் வந்தவளுமாய்
மணமிக்க நாண மட மச்சம் பயிர்ப்
பென்ன
வருமினிய மார்க்கவதியாய்
மாமிமா மற்கிதஞ் செய்பவளுமாய்
வாசல்
வருவிருந் தோம்பு பவளாய்
இணையின் மகிழ்நன் சொல்வழி
நிற்பவளுமாய் வந்தி
யென்பெய ரிலாதவளுமாய்
இரதியென வேலை புரிபவளுமாய்ப்
பிறர்தம்
இல்வழி செலாதவளுமாய்
அணியிழை யொருத்தியுண் டாயி
னவள் கற்புடைய ளாகும்
..............................."

என்ற பாட்டிற்கு இலக்கியமாக ஒழுகுவாளாயினள். சுந்தரேசுவரனுக்கும் நகுலேசுவரிக்கு மிடையேயுள்ள பாசம் நேற்றின்று பூண்டதல்லவே; சிறுபராயந்தொட்டுத் தொடர்ந்ததல்லவா? "பிரிந்தவர் கூடினாற் பேசவேண்டுமோ" என்றபிரகாரம் மணமக்களிருவரும் ஓருயிரும் ஈருடலும்போல் அன்பாக வாழ்வாராயினர்; மணமகன் அவளை உத்தம பத்தினியென்று பாராட்டி அவள்மீது பேரன்புவைத்து நடந்தான். அடுத்த நாள் மாலை சண்பகத்தம்மாள் தம்பதிகளைக் குமாரசுவாமியுடன் கூட்டிக்கொண்டு கோயிலுக்குப் போய்ச் சுவாமிதரிசனஞ் செய்வித்தபின் தங்கள் இல்லத்திற்கு விருந்தாக அழைத்துவந்தாள்.

(வரும்)


## முருகமூர்த்திகோவில் கொட்டுடை வட்டுக்கோட்டை

ஷை கோவிலுக்குப் பூசகர்தேவை:-

மணஞ் செய்தவராயும் தமிழ் சமஸ்கிருத மென்னும் இரு மொழிகளிலும் விற்பன்னராயும் குருப்பட்டம் பெற்றவராயு மிருக்கவேண்டும். திருப்திகரமான வேதனமளிக்கப்படும். ஒழுக்கம், கோயில் நிர்வாகம் முதலிய திறமைகளடங்கிய இரு நற்சாட்சிப்பத்திரங்கள் சமீபத்திற் பெற்றதாயிருக்கவேண்டும். விண்ணப்பங்கள் 25-8-43 க்குப் பிந்தாமல் முகாமையாளர் ம. அ. மயில்வாகனம் அவர்களிடம் சேரவேண்டும்.

முருகமூர்த்திகோவில்
தர்மசபைத் தலைவர்
மு. சபாரத்தினசிங்கம்

வட்டுக்கோட்டை
21—7—43.
Mis 93 29&2.8.43.



## விளம்பரமின்றேல் பெரும்புணையில்லை


## இராணுவத்தினரின் மனைவி மக்கள்

### இந்தியாவிலிருந்து இலங்கை வர அனுமதி.

இராணுவ சேவையில் இடுபட்டுள்ளவர்களின் மனைவி மக்கள் இந்தியா இலங்கை முதலிய தேசங்களிற் பிரவேசிக்கக் கூடாதென்ற தடை உத்தரவு இவ்விரு தேசங்களிடையே நடைபெற்றுவரும் போக்குவரத்துக்களைப் பாதிக்கமாட்டாதென்று இப்பொழுது தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அதாவது இலங்கையிலிருந்து இந்தியாவிலும் இந்தியாவிலிருந்து இலங்கையிலும் நியமிக்கப்பட்டிருக்கும் உத்தியோகஸ்தர் தங்கள் தங்கள் குடும்பங்களை அழைத்துச் செல்லலாம் என்று தெரிவித்து இலங்கைப் பிரதம காரியதரிசி பத்திரிகைகளுக்கு ஒரு செய்தியை விடுத்திருக்கிறார்.

## 7 வருடங்கட்குத் தேர்தல்களுக்கு முற்பட்டு நிற்க முடியாது.

### கை லஞ்சம் வாங்கிய பழைய அங்கத்தவர்களின் கதி.

லஞ்சக் "கமிஷன"ரின் தீர்ப்பின் பயனாக அரசாங்க சபைப் பிரமாணமொன்று செய்ய வேண்டியிருந்ததல்லவா? சென்ற திங்கட்கிழமை வெளியான விசேஷ "கஜெட்டில்" பிரகடனஞ் செய்யப்பட்டிருக்கிறது.

இந்தப் பிரமாணச் சட்டத்தின்படி அரசாங்க சபையின் திரிகோணமலை ஸ்தாபனம் ஒரு காலி ஸ்தாபனமாகப் பிரகடனஞ் செய்யப்பட்டிருப்பதுடன் லஞ்சக் கமிஷனரால் குற்றஞ்சாட்டப்பட்டுத் தங்கள் ஸ்தானங்களை இழந்த தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தவர்கள் எல்லோரும் இன்னும் ஏழு வருட காலத்துக்குத் தேர்தல்களுக்கு நிற்கத் தகுதியற்றவர்களென்றும் பிரகடனஞ் செய்யப்பட்டிருக்கிறது.

## காந்திஜீ எழுதிய கடிதம் என்ன?

### பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதில் ஒத்துழைக்கத் தயார்?

லாகூர் யூலை

சென்றவருட ஆகஸ்ட் தீர்மானத்தை வாபஸ் வாங்கிக்கொள்ளத் தயாரென வைஸ்ராய்க்குக் காந்திஜி எழுதிய கடிதத்தில் எழுதப்பட்டிருப்பதான செய்திக்கு யாதொரு ஆதாரமுமில்லை. மேலும் அவர் மீண்டும் உண்ணாவிரதமிருக்கப்போவதாகக் குறிப்பிட்டுள்ளார். எனச் சிலரால் வெளியான கூற்றுக்கும் ஆதாரம் கிடையாது. என டிரிபியூன் பத்திரிகையின் புதுடில்லி நிருபர் கூறுகிறார்.

காந்திஜியின் கடிதத்தில் யுத்தத்தையொட்டி நாட்டில் பொருளாதார நெருக்கடி அதிகரித்து வருவதும முக்கியமாக ஏழைமக்களின் துன்பங்களை வெட்டியும எழுதப்பட்டிருந்ததுடன அனபத்தை நீக்க வைஸ்ராய் ஏதாவது நடவடிக்கையெடுக்கவேண்டுமெனக் கோரியுள்ளனரெனவும் அவ்விஷயத்தில் ஒத்துழைக்கத் தயாரெனக் காந்தஜி கூறியிருப்பதாகவும தெரிகிறதென அந்நிருபர் குறிப்பிட்டுள்ளார்.

## அடுத்த வாரம் அரிசிப் பங்கிடு அளவு குறைவு

இப்பொழுது வாரமொன்றுக்கு ஒரு கொத்தாக விருக்கும் அரிசிப் பங்கீட்டு அளவு அடுத்த வாரத்திலிருந்து குறைக்கப்படுமென்றறியப்படுகிறது. சிறிது காலத்துக்கு அரிசி இறக்குமதியாகாதென்பதை முன்னிட்டே அரிசிப் பங்கீட்டுஅளவைக் குறைக்க வேண்டிய அவசியமேற்பட்டிருக்கிறதென்று அறியப்படுகிறது.

இந்தியாவில் அரிசி நிலைமை மிகவும் மோசமாயிருப்பதால் மத்திய அரசாங்கத்துக்கு இந்தியாவிலிருந்து மேற்கொண்டு அரிசி ஏற்றுமதி செய்ய முடியாதிருக்கிறதென்று இந்திய அரசாங்கம் வெள்ளிக்கிழமையன்று அறிவித்தது.

அடுத்த வாரத்தில் ஆரம்பமாகும் புதிய அரிசிப் பங்கீட்டு அளவு ஏற்கெனவே இலங்கையில் இறக்குமதி செய்யப்பட்டிருக்கும் அரிசியையும் உள்நாட்டு நெல் வாங்குந் திட்டத்திலிருந்து கிடைக்கக்கூடிய அரிசியையும் பொறுத்ததாயிருக்கும.

வயது வந்தவர்களுக்கு வாரமொன்றுக்கு ஒருகொத்து அரிசிவீதம், கொடுக்கும இப்போதைய பங்கீட்டு அளவு மேமாதம 3-ந் தேதியன்று அனுட்டானத்திற்குக் கொண்டுவரப்பட்டு இதுவரை நடைமுறையில் இருந்துவருகிறது.

இவ்வருடம் ஜனவரி மாதம் 4-ம் திகதி முதல மே மாதம் 2-ந் திகதி வரையில வயது வந்தவர்களுக்கு வாராந்தம் கொடுக்கப்பட்டு வந்த அரிசிப் பங்கீட்டு அளவு அரைக்கொத்தாகும்.

அடுத்த வாரத்தில் இதே அளவு மீண்டும் நடைக்குக் கொண்டுவரப்படலாம்.

புதுடில்லி ஜுலை 23.

இந்திய அரசாங்கத்தாரால் வெளியிடப்பட்ட அறிக்கை கூறுவதாவது:

இந்தியாவில் ஏற்பட்டிருக்கும் அரிசி நெருக்கடியை உத்தேசித்து, இந்தியாவிலிருந்து இனிமேல் அரிசி ஏற்றுமதி செய்ய மத்திய அரசாங்கம் ஏற்றுக்கொள்ள முடியாது.

## முஸோலினிக்கு அடக்கமுடியாத சிரிப்பு

நியூயோர்க் யூலை

இரண்டே இரண்டு தினங்களுக்கு முன்னர் முஸோலினியின் மனோநிலைமை மிகவும் மோசமாயிருந்ததாகத் தமக்கு நம்பத்தகுந்த இடத்திலிருந்து தகவல கிடைத்ததென்று வாஷிங்டனிலுள்ள அந்நியநாட்டு ராஜதந்திரி யொருவர் கூறினார். அவர் மேலும் கூறியதாவது:—

ஹிட்லரைச் சந்திப்பதற்கு முன்னர் முஸோலினிக்குப் புத்திமாறாட்டம் ஏற்பட்டிருந்தது. இந்தப்புத்திமாறாட்டம் அரைமணி அல்லது அதற்கதிகமான நேரம்வரை இருந்தது, அவரால் சிரிப்பை அடக்க முடியவில்லை. இத்தாலியர் ஜெர்மானியரால் அடக்கியாளப்படாமலிருப்பதற்காகவே இத்தாலி யுத்தத்திலிறங்கியதென்று அவர் மீண்டும் மீண்டும் கூறிக்கொண்டிருந்தார்

முஸோலினியின் சுகவீனம் காரணமாகவே இத்தாலிய அரசாங்கத்தில் மாற்றம் ஏற்பட்டிருக்கிறதென்று நம்பப்படுவதாயும் முஸோலினி சிறிதுகாலமாக நோய்வாய்ப்பட்டிருந்தாரென்றும் இத்தாலிய செய்தி ஸ்தாபனம அறிவிப்பதாக ஜெர்மன் செய்தி ஸ்தாபனம கூறிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரிசி விநியோக அளவு மீண்டும் பாதி ஆனதேன்?

### உணவுக் கோமிஷனரின் விளக்கம்

பொதுஜனப் பாதுகாப்பு உணவுக் கமிஷனர் மிஸ்டர், ஓ. ஈ. குணத்திலகா திங்கட்கிழமை பத்திரிகை நிருபர்களுக்குப் பேட்டியளித்துப் பேசும்போது தானிய விநியோகத்தின் அரிசி விநியோக அளவைக் குறைக்க வேண்டுமென்று மந்திரி சபை தீர்மானித்திருப்பதாகத் தெரிவித்தார்.

மேலும் மிஸ்டர். குணத்திலகா கூறியதாவது:

இவ்வருட ஆபத்திலிருந்து இந்தியாவின் அரிசி 'சப்ளை' குறைந்து கொண்டே வந்தது. சென்னை அரசாங்கம் பெப்ரவரி மாதக் கோட்டாவைப் பாதியாகக் குறைத்தது. அவ்வாறு தீர்மானிக்கப்பட்டது முதல் இந்தியாவிலிருந்து அரிசி 'சப்ளை' கொஞ்சமும் இறக்குமதியாகவில்லை. மார்ச் ஏப்ரல் மாதங்களுக்கு அரிசிக் கோட்டா ஒதுக்கப்படவே மே மாதம் 7000 தொன் அரிசி கிடைத்தது. யூன், யூலை மாதங்களில் இந்திய அரசாங்கம் இலங்கைக்கு அரிசிக் கோட்டாவை ஒதுக்கவில்லை.

### இப்பொழுது ஏற்றுமதிகளில்லை

உணவுத் தானியங்களை இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்வதைத் தடைசெய்ய இந்திய அரசாங்கம் தீர்மானித்திருப்பதாகச் சென்ற வெள்ளிக்கிழமை டெல்லியிலிருந்து அறிவிக்கப்பட்டதை மக்கள் அறிந்திருப்பர். அடுத்த அரிவிவெட்டின் பின் நிலைமை விருத்தியடைந்தாலன்றி இந்தியாவிலிருந்து மேற்கொண்டு அரிசி எதையும் எதிர்பார்ப்பதற்கில்லை. குறித்த அரிவிவெட்டுக்காலம் பெப்ரவரி மாதமாகும்.

இந்தியாவைத் தவிர்த்த ஏனைய நாடுகளிடமிருந்து கிடைத்த அரிசி சப்ளைகளைக் கொண்டே சென்ற சில மாதங்களாக இலங்கை அதன் அரிசிப் பங்கீட்டை நடத்தி வந்ததென்பதைப் பொதுவாக எவரும் அறிவர். குடியேற்றநாட்டு மந்திரியின் முயற்சிமூலம் இப்போதைய அரிசி விநியோக அளவை நடத்தி வரக் கூடியதாக விருக்கிறது. இப்பொழுது நமக்கு ஒரே ஒரு மார்க்கம் மட்டும் உண்டு. குறித்த துறைகள் மூலம் கிடைத்த 'சப்ளை' களைக் கூடியவரை அதிக காலத்திற்கு உபயோகிக்க முயலவேண்டும். இந்த 'சப்ளை' களைக்கொண்டு குறைக்கப்பட்ட விநியோகத்தை அடுத்த ஜனவரிமாதக் கடைசி வரை நடத்த முடியும்.

### முந்தியது போன்ற விநியோகம்

மொத்தத் தானிய விநியோக அளவு குறைக்கப்பட மாட்டாது. இவ்வருட ஆரம்பத்திலும் நான்கு மாதகாலம் அரிசி அளவு குறைக்கப்பட்டிருந்தது. தூரக் கிழக்கு நிலைமை காரணமாக உலகம் முழுவதும் அரிசிப்பஞ்சம் ஏற்பட்டிருக்கிறதென்பதை நாம் மறந்துவிடக் கூடாது. அரிசி உபயோகிக்கும் மற்றும் பல நாடுகளின் நிலைமை நமது நாட்டிலுள்ளதைவிட மோசமாகவிருக்கிறது. இந்தியாவிலுள்ள கஷ்டங்களைப்பற்றி நாம் தினந்தோறும் பத்திரிகைகளில் வாசித்தறிகிறோம். மொரீஷியல மக்கள் அரிசியை அடியோடு விட்டு விட்டு மற்றுந் தானியங்களை உணவாகக் கொள்ள நேர்ந்திருக்கிறது.

---

## நல்லூர்க் கந்தசுவாமி கோயில்

### வருடாந்த மகோற்சவம் 1943

நல்லூர்க் கந்தசுவாமி கோயில் வருடாந்தத் திருவிழாக்கள் காரணமாக, 1943ம் ஆண்டு ஆகஸ்டுமாசம் 15-ந் திகதி தொடக்கம் 31ந் திகதி முடிய நிதமும் காலை 6 மணி தொடக்கம் 8 மணி வரையும் கோயில் வீதிகளாகிய யாழ்ப்பாணம் பருத்தித்துறைத் தெருப் பக்கம், பழைய சந்தைத் தெருப்பக்கம் என்னுமிவை மார்க்கமாகப் போகும் எவ்வகை வண்டிகளும் அப்பாதைகளை ஒழித்து, உவைமன் தெரு, நாவாந்துறைத் தெரு, நல்லூர் 1-ம் நம்பர்க் குறுக்குத்தெரு என்னும் இவைகள் மூலமாகவே போக்குவரவு செய்ய வேண்டுமென்று இதனால் எவர்க்கும் பிரசித்தஞ் செய்யப்படுகின்றது.

M. J. மானிங்,
வடமாகாண உதவிப் பொலிஸ் தலைவர்,
பொலிஸ்தானம்,
யாழ்ப்பாணம், 23.7.43.
(Mis. 90, 26 & 29-7.43)

## போலி 5 ரூபா நோட்டுகள் நடமாட்டம்

பழைய மாதிரியான அநேக 5 ரூபாய் நோட்டுகள் கள்ளத்தனமாகத் தயாரிக்கப்பட்டு இப்பொழுது செலாவணியிலிருந்து வருகின்றன.

இந்த நோட்டுக்களில் அனேகம் சென்ற சில தினங்களுக்குள் புறக்கோட்டையிலுள்ள கடைக்காரர்களிடம் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

இப்பொழுது கள்ளத்தனமாகத் தயாரிக்கப்பட்டிருக்கும் 5 ரூபாய் நோட்டு நீரடையாளத்துடன் வெள்ளைக்காகிதத்தில் அச்சடிக்கப்பட்ட சிறிய ஐந்து ரூபாய் நோட்டின் இனத்தைச் சேர்ந்ததாகும். இந்த நோட்டின் மறுபுறத்தில் பச்சை வர்ணத்தில் பூவேலைப்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

## நெசவுசாலை மூளாய்

ஷை ஒரு தொழிற்சாலை மூளாய்வாசிகனம், கிருஷ்ணபிள்ளை பொன்னம்பலம் அவர்களால் மூளாயில் ஸ்தாபனம் செய்யும் பொருட்டு முயற்சிகள் நடைபெற்று வருகிறது. இதற்குரிய சகல தளபாடங்களும் மூலப் பொருள்களும், சேணியதெரு நெசவுச்சாலையையே பிரதானமாகப் பின்பற்றும் நோக்க முரியதாய்க் காணப்படுகிறது. இதன் ஆரம்ப விழாவை எதிர்பார்க்கிறோம்.

இது போன்ற ஸ்தாபனங்கள் நம்மவர்க்கு மிகவும் இன்றியமையாததே. ஆனால் இவை போன்றவைகளை அரசினர் ஐக்கிய சங்கச் சட்டங்களின் கீழ் நடத்துவதாயிருப்பின் இவை நீடூழி காலம் நிலைத்திருந்து நம்மவர் யாவருக்கும் விரும்பிய பலனைத் தரும் என்பது திண்ணம்.

ஆகையால் இச்சங்க ஸ்தாபகர், அபிமானிகளினதும், ஐக்கிய சங்கத்தினதும் அபிப்பிராயங்களை அறிந்து, அதன்படி செய்வார் என்பதை எதிர்பார்க்கிறோம்.

இங்ஙனம்,
பொ. தி. சம்பந்தன்.

## தேகவியோகம்

### வைத்தியலிங்கம்-அருணாசலம்

சென்ற திங்கட்கிழமை (26-7-43) இரவு 12 மணியளவில் வண்கிழக்குக் கலட்டி வீரகத்தி விநாயகர் கோவிலர்ச்சகராயிருந்தவரும் சைவாசார ஒழுக்கம் கல்வியறிவு, கிரமமான ஆன்மார்த்த பூசை முதலிய சத்கருமங்களோடு கூடியவருமாகிய திரு. வை. அருணாசலம் அவர்கள் சில நாட்களாகத் தம்மைப் பீடித்து வருத்திய நோய் காரணமாகத் தமது இல்லத்திற்றானே மனைவி, மக்கள், சகோதரர், சுற்றத்தார் புலம்ப இவ்வுலக வாழ்வை ஒருவினர். இவரது இமக்கிரியை விசேஷ அந்தியேட்டி முதலியவை அடுத்தநாள் கலட்டி முத்துமாரியம்மன் கோவிற் பூசகரும் கனிஷ்ட புத்திரனுமாகிய திரு. துரையப்பாவால் விதிப்படி சிறப்பாகச் செய்யப் பெற்றன. இறக்கும்பொழுது வயசு 72. ஐயனார் கோவிலடி திரு. ம. தம்பியப்பா உபாத்தியாயரவர்கட்கு இவர் சிறிய [illegible]. இவரது ஆன்மா [illegible].

## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

(† இசைத் தட்டு)

### வெள்ளி ஜூலை 30

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில்செய்திகள் 8 திரைகானம் † 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 பி ஆர் சிவசங்கரன்பிள்ளை பாட்டு 9 முடிவு.

1 கதம்பம்† 1-30 ஆங்கிலத்தில்செய்திகள் 1-40 பி ஆர் சங்கரன் பிள்ளை பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு

மாலை 5 எஸ் சுந்தரகாமாக்ஷி பாட்டு 5-40 தூரன்-ஷரீப் 6 பேரம்பலூர் என் அங்கப்பபிள்ளை நாகஸ்வரம் 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 இலக்கிய வாசகம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில்செய்தின் 7-45 எஸ் சுந்தரகாமாக்ஷி பாட்டு 8-30 பேரம்பலூர் என் அங்கப்பபிள்ளை நாகஸ்வரம் 9 கைகேயி நாடகம் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9 45 உலகவிவகாரங்கள் (ஆங்கிலம்) 10 கதம்பம் † 10-30 முடிவு.

### சனி யூலை 31

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 திருச்சி வாத்யகோஷ்டி 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 வி சுந்தரேசன் வயலின் 9 முடிவு.

1 கே கௌரி அம்மாள் பாட்டு 1-30 ஆங்கிலத்தில் செய்திகள்1-40 கதம்பம்† 2 தமிழில் செய்திகள் 2-05 வி சுந்தரேசன் வயலின் 2-30 முடிவு.

மாலை 5 கே கௌரி அம்மாள் பாட்டு 5.40 ஸ்கந்த புராணம் 6 திரைஇசை † 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 ஷப் இ மிராஜ் 7-25 துதிப்பாடல்கள் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7.45 உலகர் நோன்பு 8 மதராஸிலுள்ளபடி ப்ருந்தா, முக்தா பாட்டு 9-15 திருவேண்காடு சுப்ரமணியம்பிள்ளை நாகஸ்வரம் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 ராகதாளமாலிகை 10 இசைவேளை † 10-30 முடிவு.

### ஞாயிறு ஆகஸ்ட் 1

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 டி சூர்யகுமாரி † 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 கே சபேசன் வீணை 9 முடிவு.

12 கதம்பம் † 12-30 ஒலிமலர் 5 இதழ் 12 1-30 ஆங்கிலத்தில்செய்திகள் 1-40 மதுரை அனந்தலக்ஷ்மி பாட்டு 2 தமிழில்செய்திகள் 2.05 இசைக்கதம்பம் † 2-30 முடிவு.

மாலை 5 மதுரை அனந்தலக்ஷ்மி பாட்டு 5-40 தேவாராதனை 6 கே சபேசன் வீணை 6.30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7.15 புது இலக்கியம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 உமையாள்புரம் ஜி கலியாணராமய்யர் பாட்டு 9 சர்வகலாசாலைகளுக்கு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9.30 லண்டனிலிருந்துசெய்திகள் 9-45 தேசிகவிநாயகம் பிள்ளை பாடல்கள் 10 இசைவேளை † 10-30 முடிவு.

### திங்கள் ஆகஸ்ட் 2

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 திருச்சிவாத்யகோஷ்டி டி 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 டி எம் வேணுகோபாலபிள்ளை நாகஸ்வரம் 9 முடிவு.

1 கதம்பம்† 1-30ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 தேவாரம் டி பச்சையப்பா பாட்டு 2 தமிழில் செய்திகள் 2–05 கல்வி ஒலிபரப்பு 2.30 முடிவு.

மாலை 5 டி எம் வேணுகோபால பிள்ளை நாகஸ்வரம் 5-45 இசைப் பயிற்சி 6 தேவாரம் டி பச்சையப்பா பாட்டு 6.30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராமநிகழ்ச்சிகள் 7-15 செய்திச் சித்திரம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 திரைகானம் † 8 கும்பகோணம் ராஜமாணிக்கம்பிள்ளை வயலின் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்துசெய்திகள் 9-45 டி கிட்டப்பா கோட்டுவாத்யம் 10 டெல்லியில்உள்ளபடி துலாப்பாய் 10-30 முடிவு.

---




சிறுபிள்ளை வைத்தியத்திலும்
ஏனைய வைத்தியங்களிலும் சித்திபெற்ற
சில்லாலை முத்துவைத்தியசாலை

சாதாரணமாகச் சிறுவர்களுக்கு வரும் கிரந்தி, சலதோஷம், வயிற்றோட்டம், காய்ச்சல் முதலிய நோய்களைத் தணிக்கும் ஒப்புயர்வற்ற அரிய பெரிய மருந்துகளும் நெடுநாட்பட்ட இருமல் மேகம் கிரந்தி வாதங்களை அகற்றும் அனுபவம் வாய்ந்த சிறந்த மருந்துகளும், எண்ணெய்வகைகளும் எம்மிடம் ஏராளமாயுண்டு. ஏழைகளையும் தனவந்தர்களையும் ஒரேசீராய் நடத்தும் அரசினரின் அங்கீகாரம் பெற்ற சில்லாலை முத்து வைத்தியர்.
அ. செபஸ்தியாம்பிள்ளை. பெரியதெரு, நம். 160, மேல்வீடு, யாழ்ப்பாணம்.
(Q. 30, 11-5.43—10-8.43)

குறைந்த விலையில் துணிகள்
ஷேட்துணிகள், துவாய்கள் பஞ்சாலும் பட்டாலும் ஆகிய சேலைகள் முதலியவை.
R. S. M. டெக்ஸ்டைல் ஸ்டோர்ஸ்
மொத்தத்துக்கும் சில்லறைக்கும் விற்கும் வியாபாரிகள்
பெரியகடை—யாழ்ப்பாணம்.
K. A. இரத்தினசிங்கம்,
பங்காளர்.
Y 19. 4-3-42——3-3-44


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக|வுலகமெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Thursday 29, July, 1943.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org